©
GOVERNMENT OF TAMIL NADU
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 5.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 27] CHENNAI, MONDAY, FEBRUARY 17, 2014
Maasi 5, Vijaya, Thiruvalluvar Aandu–2045

## Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

**வருவாய்த் துறை**

*தலைமைச் செயலகம், 2014 பிப்ரவரி 17.*

**No. II(1)/REV/1(a-1)/2014.**

**[ஆட்சி எல்லை – கடலூர் மாவட்டம் – விருத்தாச்சலம் மற்றும் திட்டக்குடி வட்டங்களைப் பிரித்து வேப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வேப்பூர் வட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.]**

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது :—

*[அரசாணை (நிலை) எண் 485, வருவாய் [வ.நி.1(1)] துறை, 2013 நவம்பர் 27.]*

**படிக்கப்பட்டது :**

1. அரசாணை(நிலை)எண் 279, வருவாய்த்துறை, நாள் 09–06–2003.
2. அரசாணை(2டி)எண் 176, வருவாய் [வ.நி.1(1)] துறை, நாள் 15–06–2012.
3. மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் கடித எண் ந.க.வி3/18423/2012, நாள் 12–03–2012.
4. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கடித எண் பணி 6(4)/18674/2013, நாள் 22–04–2013.

**ஆணை:**

***[அரசாணை (நிலை) எண் 485, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 2013 நவம்பர் 27.]***

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 15–05–2013–அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

"கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டத்தினைப் பிரித்து புதிய வேப்பூர் வட்டம் உருவாக்கப்படும்".

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின் அடிப்படையிலும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அமைக்கப்பட்ட உயர்மட்ட குழுவின் ஒப்புதலின் பேரிலும், கூடுதல் தலைமை செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் புதிய வேப்பூர் வட்டம் உருவாக்குவது தொடர்பாக தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:—

(i) தற்போதுள்ள விருத்தாச்சலம் வட்டமானது, விருத்தாச்சலத்தை தலைமையிடமாகக் கொண்டு விருத்தாச்சலம் வட்டம் எனவும், தற்போதைய திட்டக்குடி வட்டமானது, திட்டக்குடியை தலைமையிடமாகக் கொண்டு திட்டக்குடி வட்டம் எனவும், தற்போது புதியதாக பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வட்டம் விருத்தாச்சலம் வட்டத்தில் உள்ள வேப்பூர் குறுவட்டத்தினை தலைமையிடமாகக் கொண்டு வேப்பூர் வட்டம் எனவும், பிரிக்கலாம். புதிதாக பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வேப்பூர் வட்டத்தில் நல்லூர் மற்றும் மங்களூர் ஊராட்சி ஒன்றியங்கள் பகுதியாகவும், விருத்தாச்சலம் மற்றும் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதிகள் பகுதியாகவும் அமைந்துள்ளது. புதியதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்படுள்ள புதிய வட்டத்தில் தற்போதுள்ள விருத்தாச்சலம் வட்டத்தில் உள்ள வேப்பூர் குறுவட்டம் (23 வருவாய் கிராமங்கள்) முழுவதும் நல்லூர் குறுவட்டத்தில் அடங்கிய 20 வருவாய் கிராமங்களில் 9 வருவாய் கிராமங்கள் ஆக 32 வருவாய் கிராமங்களை உள்ளடக்கி புதிய வேப்பூர் குறுவட்டம் ஆகவும், தற்போதுள்ள திட்டக்குடி வட்டத்தில் உள்ள சிறுபாக்கம் குறுவட்டம் முழுவதும் (21 வருவாய் கிராமங்கள்) சிறுபாக்கம் குறுவட்டம் ஆகவும், ஆக 53 வருவாய் கிராமங்கள், இரு குறுவட்டங்களை கொண்டு வேப்பூர் வட்டம் அமையும்.

(ii) விருத்தாச்சலம் மற்றும் திட்டக்குடி வட்டங்களை சீரமைத்து மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி புதிய வேப்பூர் வட்டம் உருவாக்கலாம்.

(iii) வேப்பூர் வட்டத்திற்கு 38 பணியிடங்கள் வருவாய்த் துறைக்கும், 6 பணியிடங்கள் நில அளவை துறைக்கும் தோற்றுவிக்க ஒப்பளிப்பு செய்தும், புதிய வேப்பூர் வட்டம் உருவாக்குவதற்கு தொடரும் செலவினமாக ரூ.1,36,40,000/–க்கும், தொடரா செலவினமாக ரூ.21,93,000/–க்கும் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரைகளை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:—

(i) கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் மற்றும் திட்டக்குடி வட்டங்களை சீரமைத்து புதிய வேப்பூர் வட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்படும் வேப்பூர் வட்டத்திற்கு கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு, 18 பணியிடங்கள் மறுபரவலமர்த்தல் மூலமாகவும் 24 பணியிடங்கள் புதியதாக உருவாக்கவும் ஆக மொத்தம் 42 பணியிடங்கள் புதியதாக தோற்றுவிக்க ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

| *வ.எண்* | *பணியிடத்தின் பெயர்* | *As per Standard Pattern* | *மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டியது* | *புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள்* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| **பொதுப் பிரிவு** | | | | |
| 1 | வட்டாட்சியர் | 1 | 0 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | 0 | 0 | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் | 0 | 1 * | 0 * |
| 4 | வருவாய் ஆய்வாளர் | | 1+1 | 0 |
| 5 | உதவியாளர் | 6+2 | 1+2 | 0 |
| 6 | இளநிலை உதவியாளர் | 2 | 1+2 | 2 |
| 7 | பதிவறை எழுத்தர் | 1 | 0 | 1 |
| 8 | தட்டச்சர் | 1 | 1 | 0 |
| 9 | அலுவலக உதவியாளர் / வருவாய் ஆய்வாளர்களுக்கு | 3+2 | 2+3 | 0 |
| 10 | ஈப்பு ஓட்டுனர் | 1 | 0 | 1 |
| 11 | இரவுக் காவலர் | 1 | 0 | 1 |
| 12 | மசால்சி | 1 | 0 | 0 |
| | மொத்தம் — | 21 | 15 | 7 |

*திட்டக்குடி வட்டப் பிரிவினைக்குப்பின் 4 குறுவட்டங்களாக உள்ளது. எனவே, ஒரு மண்டல துணை வட்டாட்சியர் போதுமான நிலையில் உள்ளது. மற்ற ஒரு பணியிடம் புதியதாக உருவாக்கப்படும் வேப்பூர் வட்டத்திற்கு மாற்றலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| **தேர்தல் பிரிவு** | | | | |
| 1 | துணை வட்டாட்சியர் | 0 | 0 | 1 |
| 2 | உதவியாளர் | 0 | 0 | 1 |
| | மொத்தம் — | 0 | 0 | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| **சமூகபாதுகாப்புத் திட்டம்** | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் (சபா.தி/ தனி வட்டாட்சியர்) | 1 | 0 | 1 |
| 2 | உதவியாளர் | 0 | 0 | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | | 0 | 0 |
| 4 | தட்டச்சர் | | 1 | 0 |
| 5 | ஈப்பு ஓட்டுநர் | 0 | 0 | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | 0 | 0 | 1 |
| 7 | பதிவறை எழுத்தர் | | 0 | 1 |
| | மொத்தம் — | 1 | 1 | 5 |

| *வ.எண்* | *பணியிடத்தின் பெயர்* | *As per Standard Pattern* | *மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டியது* | *புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள்* |
|---|---|---|---|---|
| **வட்ட வழங்கல் பிரிவு** | | | | |
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 1 | வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர் நிலை) | 1 | 0 | 1 |
| 2 | உதவியாளர் | 0 | 0 | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | 0 | 0 | 1 |
| 4 | தனிவருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | 0 | 0 | 2 |
| 5 | அலுவலக உதவியாளர் | 0 | 0 | 1 |
| | மொத்தம் | 1 | 0 | 6 |
| **சிறப்பு திட்ட அமலாக்கம்** | | | | |
| 1 | துணை வட்டாட்சியர் | 0 | 0 | 0 |
| 2 | வருவாய் உதவியாளர் | 0 | 0 | 0 |
| 3 | கணினி இயக்குபவர் (Consolidated Pay at Rs.7500 p.m.) | 0 | 0 | 0 |
| | மொத்தம் | 0 | 0 | 0 |
| **நில அளவை பிரிவு** | | | | |
| 1 | மண்டல துணை ஆய்வாளர் | 1 | 0 | 1 |
| 2 | வட்டசார் ஆய்வாளர் | 1 | 0 | 1 |
| 3 | முதுநிலை வரைவாளர் | 1 | 2 | 0 |
| 4 | இளநிலை வரைவாளர் | 0 | 0 | 0 |
| 5 | குறுவட்ட அளவர் | 0 | 0 | 1 |
| 6 | புல உதவியாளர் | 1 | 0 | 1 |
| | மொத்தம் | 4 | 2 | 4 |
| | மொத்தம் (வருவாய்) | 23 | 16 | 20 |
| | மொத்தம் (நில அளவை) | 4 | 2 | 4 |
| | நிகர மொத்தம் | 27 | 18 | 24 |

(iii) புதியதாக உருவாக்கப்படும் வேப்பூர் வட்டத்திற்கு கீழே அட்டவணையில் உள்ளவாறு, தொடரும் மற்றும் தொடராச் செலவினம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

**தொடரும் செலவினங்கள்**

| *வ.எண்* | *விவரம்* | *தொகை ரூ.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் | 48,90,000 |
| 2 | அலுவலக கட்டிட வாடகை | 1,44,000 |
| 3 | மின்சார கட்டணம் | 1,20,000 |
| 4 | எரிபொருள் (டீசல்) | 1,50,000 |
| 5 | தொலைபேசி கட்டணம் | 25.000 |
| | மொத்தம் | 53,29,000 |

(ரூபாய் ஐம்பத்து மூன்று இலட்சத்து இருபத்தொன்பதாயிரம் மட்டும்)

**தொடரா செலவினங்கள்**

| *வ.எண்* | *விவரம்* | *தொகை ரூ.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | அலுவலகக் கட்டடம் | * |
| 2. | வட்டாட்சியர் குடியிருப்பு | * |
| 3. | தளவாடங்கள் | 5,00,000 |
| 4. | ஈப்பு | 11,12,000 |
| 5. | தொலைபேசி இணைப்பு | 6,000 |

| *வ.எண்* (1) | *விவரம்* (2) | *தொகை ரூ.* (3) |
|---|---|---|
| **தொடரா செலவினங்கள்**—*தொடர்ச்சி* | | |
| 6. | கணினி | 75,000 |
| 7. | பிரிண்டர் (அச்சுப்பதிப்பு) இயந்திரம் | 25,000 |
| 8. | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 65,000 |
| 9. | பேக்ஸ் | 10,000 |
| 10. | குளிர்சாதனம் | 25,000 |
| 11. | தீயணைப்பான் | 10,000 |
| 12. | சுவர் கடிகாரம் (ம) பணப்பெட்டி | ... |
| | **மொத்தம் –** | **18,28,000** |

(ரூபாய் பதினெட்டு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் மட்டும்)

* அலுவலக கட்டடம் மற்றும் குடியிருப்பிற்கான செலவினம் Rough cost estimate-ல் பொதுப்பணித் துறையினரிடமிருந்து பெறப்பட்டு அக்கருத்துரு தனியே ஆய்வு செய்யப்படலாம்.

**4.** மேலே பத்தி 3(iii)-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்க வேண்டும்:

(I) பணியாளர் சம்பளங்கள்

(i) வருவாய் பணியிடங்கள் ரூ.1,000/–

2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு-I, திட்டத்தில் சேராதது -AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்

**(த.தொ.கு. 2053 00 094 AB 0102)**

(ii) நில அளவைப் பணியிடங்கள் ரூ.1,000/–

2029–00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் – I. திட்டத்தில் சேராதது AF நில அளவை பராமரிப்பு பணி – 01 சம்பளங்கள்

**(த.தொ.கு. 2029 00 102 AF 0105)**

(iii) குடிமைப் பொருள் பணியிடங்கள் ரூ.1,000/–

3456–00 நுகர் பொருள் வழங்கல் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும்–I. திட்டத்தில் சேராதது AB மாவட்ட பணியாளரமைப்பு – 01 சம்பளங்கள்

**(த.தொ.கு. 3456 00 001 AB 0108)**

(II) 2053–00 மாவட்ட நிருவாகம் – 094 – ஏனைய பணியாளரமைப்பு–I. திட்டத்தில் சேராதது – AB வட்டப் பணியாளரமைப்புகள்

(அ) 05 அலுவலகச் செலவுகள் 01 தொலைபேசி கட்டணங்கள் ரூ. 31,000/– தொடரும் செலவினம் ரூ.25,000/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.6,000/–

**(த.தொ.கு. 2053 00 094 AB 0513)**

(ஆ) 05 அலுவலகச் செலவுகள் – 03 மின் கட்டணங்கள் ரூ.1,20,000/–
**(த.தொ.கு. 2053 00 094 AB 0531)**

(இ) 05 05 அறைகலன்கள் ரூ.5,00,000/–

05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
**(த.தொ.கு. 2053 00 094 AB 0559)**

(ஈ) 06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை ரூ.1,44,000/–
தொடரும் செலவினம்
**(த.தொ.கு. 2053 00 094 AB 0611)**

(உ) 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ.1,10,000/–

**(த.தொ.கு. 2053 00 094 AB 1914)**

(ஊ) 21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ.11,12,000/–
**(த.தொ.கு. 2053 00 094 AB 2119)**

(எ) 45 பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ.1,50,000/–
**(த.தொ.கு. 2053 00 094 AB 4500)**

(ஏ) 76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் ரூ.1,00,000/–
**(த.தொ.கு. 2053 00 094 AB 7614)**

5. மேலே பத்தி 3(iii))–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணியாகும். (New Instrument of Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5 கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2013–2014 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும்பொருட்டு உரிய வரைவு செயற்குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது/வருவாய்) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணையின் இணைப்பு–1–இல் கண்டுள்ள அறிவிக்கை **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்படும். இப்புதிய வட்டம் 27–11–2013–ஆம் நாள் முதல் செயல்படும்.

7. புதிய வேப்பூர் வட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 3–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இந்த அரசாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 69466/மை.ம.ஆ.பி/2013, நாள் 27–11–2013–இல் இசைவுடன் வெளியிடப்படுகிறது. மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண். 2114 (இரண்டாயிரத்து நூற்று பதினான்கு).

(ஆளுநரின் ஆணைப்படி)

**ககன்தீப் சிங் பேடி,**
*அரசு செயலாளர்.*

**இணைப்பு–I**

*[அரசாணை (நிலை) எண் 485, வருவாய்த் துறை, நாள் 27 நவம்பர் 2013.]*

***அறிவிக்கை–I***

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், கடலூர் மாவட்டத்தில் உள்ள விருத்தாச்சலம் கோட்டத்திலுள்ள விருத்தாச்சலம் மற்றும் திட்டக்குடி வட்டங்களில் உள்ள பின்வரும் வருவாய் கிராமங்களைப் பிரித்து 2013ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 27–ஆம் நாளிலிருந்து வேப்பூரை தலைமையிடமாகக் கொண்டு வேப்பூர் வட்டம் கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வருவாய் குறுவட்டங்களை தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. தற்போதைய விருத்தாச்சலம் வட்டத்தில் உள்ள (1) வேப்பூர் குறுவட்டம் முழுவதும் மற்றும் நல்லூர் குறுவட்டத்திலிருந்து பிரிக்கப்படும் 9 வருவாய் கிராமங்களை ஒருங்கிணைத்து அமைக்கப்படும் வேப்பூர் குறுவட்டத்தின் மீது தற்போது விருத்தாச்சலம் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்களும், தற்போதைய திட்டக்குடி வட்டத்தில் உள்ள சிறுபாக்கம் குறுவட்டம் மீது திட்டக்குடி வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள், இனி வேப்பூர் வட்டாட்சியரால் 2013ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 27–ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

***1. வேப்பூர் குறுவட்டம்***

| *வ.எண்.* | *வருவாய் கிராமத்தின் எண்.* | *வருவாய் கிராமங்களின் பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | 11 | சேப்பாக்கம் |
| 2. | 9 | ஆதியூர் |
| 3. | 10 | அ.கொளப்பக்கம் |
| 4. | 4 | பா.கொத்தனூர் |
| 5. | 2 | ஆ.மரூர் |
| 6. | 1 | சேதுவராயன்குப்பம் |
| 7. | 12 | சிறு நெசலூர் |
| 8. | 22 | ஐவதுகுடி |
| 9. | 3 | மாளிகைமேடு |
| 10. | 5 | மேலக்குறிச்சி |
| 11. | 7 | கீழக்குறிச்சி |
| 12. | 13 | வேப்பூர் |

| *வ.எண்.* | *வருவாய் கிராமத்தின் எண்.* | *வருவாய் கிராமங்களின் பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 13. | 17 | வரம்பனூர் |
| 14. | 28 | தே.புடையூர் |
| 15. | 18 | என் நரையூர் |
| 16. | 30 | மன்னம்பாடி |
| 17. | 6 | பெரியநெசலூர் |
| 18. | 8 | காட்டுமைலூர் |
| 19. | 20 | கோ.கொத்தனூர் |
| 20. | 19 | திருப்பயர் |
| 21. | 15 | நிராமணி |
| 22. | 16 | காளியாமேடு |
| 23. | 14 | பூலாம்பாடி |
| 24. | 24 | நல்லூர் |
| 25. | 25 | வண்ணாத்தூர் |
| 26. | 21 | நகர் |
| 27. | 41 | சாத்தியம் |
| 28. | 27 | ஏ.சித்தூர் |
| 29. | 23 | இலங்கியனூர் |
| 30. | 26 | மே.மாத்தூர் |
| 31 | 45 | வலசை |
| 32 | 44 | பிஞ்சனூர் |

***2. சிறுபாக்கம் குறுவட்டம்***

| *வ.எண்.* | *வருவாய் கிராமத்தின் எண்.* | *வருவாய் கிராமங்களின் பெயர்.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | 35 | அட்ரி |
| 2. | 34 | களத்தூர் |
| 3. | 33 | ஜா.ஏந்தல் |
| 4. | 30 | ரெட்டாக்குறிச்சி |
| 5. | 29 | மாங்குளம் |
| 6. | 37 | பொயனப்பாடி |
| 7. | 36 | காஞ்சிராங்குளம் |
| 8. | 31 | கீழ்ஒரத்தூர் |
| 9. | 32 | கொளவாய் |
| 10. | 27 | மங்களூர் |
| 11. | 15 | ஓரங்கூர் |
| 12. | 38 | வினாயகநந்தல் |
| 13. | 28 | கச்சிமைலூர் |
| 14. | 13 | மலையனூர் |
| 15. | 26 | ம.புதூர் |
| 16. | 14 | ம.கொத்தனூர் |
| 17. | 11 | அரசங்குடி |
| 18. | 10 | எஸ்.நரையூர் |
| 19. | 12 | சிறுபாக்கம் |
| 20. | 9 | வடபாதி |
| 21. | 1 | சித்தேரி |

*[அரசாணை (நிலை) எண் 485, வருவாய்த் துறை, நாள் 27 நவம்பர் 2013.]*

***அறிவிக்கை—2***

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், கடலூர் மாவட்டத்தில் உள்ள விருத்தாச்சலம் வட்டம் விருத்தாச்சலம் வட்டத்தில் ஏற்கனவே இயங்கிவரும் கம்மாபுரம் (கிழக்கு), கம்மாபுரம் (மேற்கு), விருத்தாசலம் (வடக்கு), விருத்தாச்சலம் (தெற்கு), ஊ.மங்கலம் குறுவட்டங்களையும், ஏற்கனவே உள்ள நல்லூர் குறுவட்டத்திலிருந்து வேப்பூர் குறுவட்டத்தில் இணைக்கப்பட்ட 9 வருவாய் கிராமங்கள் நீங்கலாக மீதமுள்ள 11 வருவாய் கிராமங்களைக் கொண்டு நல்லூர் குறுவட்டம் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு 2013ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 27—ஆம் நாளிலிருந்து செயல்படும்.

2. நல்லூர் குறுவட்டத்தில் உள்ளடங்கும் கீழ்க்கண்ட வருவாய் கிராமங்கள் மீது தற்போது விருத்தாச்சலம் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் விருத்தாச்சலம் வட்டாட்சியரால் 2013—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27—ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

***நல்லூர் குறுவட்டம்***

| *வ.எண்.* | *வருவாய் கிராமத்தின் எண்.* | *வருவாய் கிராமங்களின் பெயர்.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | 53 | கோ.மங்கலம் |
| 2. | 54 | கோவிலானூர் |
| 3. | 50 | கர்ணத்தம் |
| 4. | 49 | விசலூர் |
| 5. | 52 | மு.அகரம் |
| 6. | 46 | எடச்சித்தூர் |
| 7. | 47 | சிறுவம்பார் |
| 8. | 48 | தி.மாவிடந்தல் |
| 9. | 51 | காட்டுப்பரூர் |
| 10. | 42 | சின்னப்பரூர் |
| 11. | 44 | பிஞ்சனூர் |

**ககன்தீப் சிங் பேடி,**
*அரசு செயலாளர்.*

***வருவாய்த் துறை***

*தலைமைச் செயலகம், 2014 பிப்ரவரி 17.*

**No. II(1)/REV/1(a-2)/2014.**

**[ஆட்சி எல்லை — கரூர் மாவட்டம் – கரூர் வட்டத்தினை பிரித்து புதியதாக மண்மங்கலம் வட்டம் உருவாக்குதல் — ஆணை வெளியிடப்படுகிறது.]**

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:—

*[அரசாணை (நிலை) எண் 427, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 30 அக்டோபர் 2013.]*

**படிக்கவும் :**

1. அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 09—06—2003.
2. அரசாணை (2D) எண் 176, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, நாள் 15—06—2012.
3. கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண் எச்1/5722/2012. நாள் 8—5—2013.
4. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், சென்னை—5, கடித எண் பணி 6(4)/45738/2012, நாள் 11—05—2013.

**ஆணை:**

***[அரசாணை (நிலை) எண் 427, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 30 அக்டோபர் 2013.]***

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 15—05—2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110—ன்கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:—

**"கரூர் மாவட்டம், கரூர் வட்டத்தினைப் பிரித்து புதிய மண்மங்கலம் வட்டம் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின் அடிப்படையிலும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அமைக்கப்பட்ட உயர்மட்ட குழுவின் ஒப்புதலின் பேரிலும், கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக

ஆணையர் அவர்கள் புதிய மண்கமங்கலம் வட்டம் உருவாக்குவது தொடர்பாக தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்துள்ளார்:—

I. 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி,. 4,44,721 என்ற எண்ணிக்கையிலான மக்கள் தொகை கொண்ட கரூர் வட்டத்தை இரண்டாக பிரிக்கலாம் எனவும், தற்போது கரூர் ஒன்றியம், தாந்தோணி ஒன்றியம் மற்றும் கரூர் நகராட்சியை உள்ளடக்கி 52 வருவாய்க் கிராமங்களுடன் கரூர் வட்டம் செயல்பட்டு வருகிறது எனவும், கரூர் வட்டத்தை 2,85,004 மக்கள் தொகை கொண்ட கரூர் வட்டம் மற்றும் 1,59,717 மக்கள் தொகை கொண்ட புதிய வட்டம் என நிலவியல் ரீதியாகவும் பிரிக்கலாம்.

II. புதியதாக பிரிக்க உத்தேசிக்கப்படும் வட்டத்தில் மண்மங்கலம் கிராமம் பிரதான தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது, அனைத்து கிராமங்களிலிருந்தும் காலவிரயமின்றி மக்கள் எளிதாக வட்டாட்சியர் அலுவலகத்தை அணுகக்கூடிய அளவில் புதியதாக அமையவுள்ள வட்டத்தின் மையப்பகுதியாக மண்மங்கலம் கிராமம் அமைந்துள்ளது, எனவே புதியதாக தோற்றுவிக்கப்படவுள்ள வட்டத்திற்கு தலைமையிடமாக மண்மங்கலம் கிராமத்தை நிர்ணயித்து மண்மங்கலம் வட்டம் என பெயரிடலாம். மேலும் உத்தேச மண்மங்கலம் வட்டம் 362 சதுர கி.மீட்டர் பரப்பளவு கொண்டதாக அமையும். உத்தேச வட்டத்தில் 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 1,59,717 ஆகும். உத்தேச மண்மங்கலம் வட்டத்தின் வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை 30 ஆகும். புதிய மண்மங்கலம் வட்டமாக உருவாக்கும்போது ஏற்கனவே உள்ள கரூர் வட்டத்தில் உள்ள 6 குறுவட்டங்களில் புகளூர் முழுமையாகவும், வாங்கல் குறுவட்டத்தில் 5 கிராமங்களும், தாளப்பட்டி குறுவட்டத்திலிருந்து 6 கிராமங்கள் அடங்கிய தாளப்பட்டி குறுவட்டம் 3வதாகவும், எடுத்துக் கொள்ளப்படுகிறது. 4வது குறுவட்டமாக மண்மங்கலம் குறுவட்டம் அமைக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கு கரூர் குறுவட்டத்திலிருந்து 6 கிராமங்களும், வெள்ளியணை குறுவட்டத்திலிருந்து 1 கிராமம், வாங்கல் குறுவட்டத்திலிருந்து 3 கிராமங்களும் ஆக மொத்தம் 10 கிராமங்கள் எடுக்கப்பட்டு மண்மங்கலத்தை தலைமையிடமாக கொண்டு மண்மங்கலத்தை குறுவட்டமாக அமைக்கலாம்.

III. மேலும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, உத்தேச மண்மங்கலம் வட்டத்தில் எந்தவொரு ஊராட்சி ஒன்றியமும் இரண்டு வட்ட எல்லைக்குள் இருக்கக் கூடாது என்ற குறையைத் தவிர உத்தேச மண்மங்கலம் வட்டத்தில் வருவாய் வட்டத்திற்குரிய அனைத்து அளவுகோல்களும் உள்ளன. மேற்கண்ட அரசாணையின் விதியை தளர்வு செய்து தற்போது பரிந்துரைக்கப்பட்டு அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய புதிய வட்டத்தினை மண்மங்கலம் வட்டம் என்ற பெயரில் அமைத்திடலாம்.

IV. கரூர் வட்டத்தை இரண்டாக பிரித்து புதிய மண்மங்கலம் வட்டம் உருவாக்குவது தொடர்பாக மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி உள்ள விவரங்கள் பின்வருமாறு:—

| *வரிசை எண்.* | *ஆட்சி எல்லை விளக்கங்கள்.* | *தற்போது உள்ள வட்டம்.* | *உத்தேசிக்கப்பட்ட வட்டம்.* | *எஞ்சிய வட்டம்.* | *அரசாணை எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி குறித்த நிலை.* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| 1. | தலைமையிடம் | கரூர் | மண்மங்கலம் | கரூர் | |
| 2. | பரப்பளவு (ச.கி.மீ) | 594 ச.கி.மீ. | 362 ச.கி.மீ. | 232 ச.கி.மீ. | 250 ச.கி.மீ முதல் 2000 ச.கி.மீ வரை |
| 3. | மக்கள் தொகை | 4,44,721 | 1,59,717 | 2,85,004 | குறைந்தளவு 1 லட்சம் முதல் அதிகளவு 5,50,000 வரை |
| 4 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | கரூர்<br>தாந்தோணி | கரூர் | கரூர்<br>தாந்தோணி | 2 அல்லது 3 முழு ஊராட்சி ஒன்றியங்கள் |
| 5 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 52 | 30 | 22 | குறைந்தளவு 30 கிராமங்கள் |
| 6 | குறுவட்டங்களின் எண்ணிக்கை | 6 | 4 | 3 | – |
| 7 | கிராம பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை | கரூர் –14<br>தாந்தோணி–17<br>––––<br>31<br>–––– | 21 | 10 | – |

| *வரிசை எண்* | *ஆட்சி எல்லை விளக்கங்கள்.* | *தற்போது உள்ள வட்டம்.* | *உத்தேசிக்கப்பட்ட வட்டம்.* | *எஞ்சிய வட்டம்.* | *அரசாணை எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி குறித்த நிலை.* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| 8 | நகர பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 1.டி.என்.பி.எல்<br>2.தோட்டகுறிச்சி<br>3. பு.•புகளூர்<br>4. புலியூர்<br>5. உப்பிடமங்கலம் | 1.டி.என்.பி.எல்<br>2.தோட்டகுறிச்சி<br>3. பு.•புகளூர் | 1. புலியூர்<br>2. உப்பிடமங்கலம் | – |
| 9 | மாநகராட்சியின் எண்ணிக்கை | – | – | – | – |
| 10 | நகராட்சிகளின் எண்ணிக்கை (பெயருடன்) | கரூர் நகராட்சி | – | கரூர்நகராட்சி | – |
| 11 | வருவாய்க் கோட்டத்தின் பெயர் | கரூர் | கரூர் | கரூர் | – |
| 12 | சட்டமன்ற தொகுதியின் பெயர் | 1. கரூர்<br>2. கிருஷ்ணராயபுரம்<br>3. அரவக்குறிச்சி | 1. கரூர்<br>2. அரவக்குறிச்சி<br>3. கிருஷ்ணராயபுரம் | 1. கரூர்<br>2. கிருஷ்ணராயபுரம் | – |
| 13 | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | கரூர் | கரூர் | கரூர் | – |
| 14 | தலைமையகத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் | வேட்டமங்கலம் | வேட்டமங்கலம் | ஜெகதாபி | – |

V. கரூர் வட்டத்தை பிரித்து புதிய மண்மங்கலம் வட்டத்திற்கான பணியிட விவரங்கள் பின்வருமாறு:—

| *வ. எண்.* | *பணியிடத்தின் பெயர்* | *நிரந்தரம்/ தற்காலிகம்* | *கரூர் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள்* | *கரூர் வட்டத்தில் நிறுத்திவைக்க வேண்டிய பணியிடங்கள்* | *மணிமங்கலம் வட்டத்திற்கு மாற்றம் செய்யவேண்டிய பணியிடங்கள்* | *மணிமங்கலம் வட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள்* | *மணிமங்கலம் வட்டத்திற்கு அனுமதிக்க வேண்டிய பணியிடங்கள்* |
|---|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* | *(8) (6+7)* |
| **அ.** | **பொதுப் பிரிவு** | | | | | | |
| 1 | வட்டாட்சியர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் | நிரந்தரம் | 2 | 1 | 1 | 1 | 2 |
| 4 | உதவியாளர் | நிரந்தரம் | 6 | 3 | 3 | – | 3 |
| 5 | வருவாய் ஆய்வாளர் | நிரந்தரம் | 6 | 3 | 3 | 1 | 4 |
| 6 | இளநிலை உதவியாளர் | நிரந்தரம் | 4 | 2 | 2 | 1 | 3 |
| 7 | தட்டச்சர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 8 | பதிவறை எழுத்தர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 9 | அலுவலக உதவியாளர் | நிரந்தரம் | 10 | 5 | 5 | 2 | 7 |
| 10 | இரவுக் காவலர் | நிரந்தரம் | – | – | – | 1 | 1 |
| 11 | ஈப்பு ஓட்டுநர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 12 | மசால்ஜி | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| | | மொத்தம் | 34 | 20 | 14 | 12 | 26 |

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம்/ தற்காலிகம் | கரூர் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | கரூர் வட்டத்தில் நிறுத்திவைக்க வேண்டிய பணியிடங்கள் | மணிமங்கலம் வட்டத்திற்கு மாற்றம் செய்யவேண்டிய பணியிடங்கள் | மணிமங்கலம் வட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | மணிமங்கலம் வட்டத்திற்கு அனுமதிக்க வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) (6+7) |
| **ஆ. தேர்தல் பிரிவு:** | | | | | | | |
| 1 | துணை வட்டாட்சியர் | தற்காலிகம் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | – | 1 | 1 |
| | | **மொத்தம் ..** | **2** | **2** | **–** | **2** | **2** |
| **இ. சமூக பாதுகாப்புத் திட்டம்:** | | | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் | தற்காலிகம் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | தற்காலிகம் | 2 | 2 | – | 2 | 2 |
| 3 | இளநிலை உதவியாளர் | தற்காலிகம் | 3 | 2 | 1 | – | 1 |
| 4 | தட்டச்சர் | தற்காலிகம் | – | – | – | 1 | 1 |
| 5 | ஈப்பு ஓட்டுநர் (ஈப்பு ஓட்டுநர் பணியிடம் இதுவரை நிரப்பப்படவில்லை) | தற்காலிகம் | 1 | 1 | – | 1 | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | தற்காலிகம் | – | – | – | 1 | 1 |
| | | **மொத்தம் ..** | **8** | **7** | **1** | **6** | **7** |
| **ஈ. வட்ட வழங்கல் பிரிவு:** | | | | | | | |
| 1 | வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர்) | தற்காலிகம் | 1 | 1 | 0 | 1 | 1 |
| 2 | உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 1 | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 1 | 1 |
| 4 | தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலையில்) | தற்காலிகம் | 1 | 1 | 0 | 2 | 2 |
| 5 | அலுவலக உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 1 | 1 |
| | | **மொத்தம் ..** | **5** | **5** | **0** | **6** | **6** |
| **உ. சிறப்பு திட்ட அமலாக்கம்:** | | | | | | | |
| 1 | தனி துணை வட்டாட்சியர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 1 | 1 |
| 2 | உதவியாளர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 1 | 1 |
| 3 | கணினி இயக்குபவர் | தற்காலிகம் | 1 | 1 | 0 | 1 | 1 |
| | | **மொத்தம் ..** | **3** | **3** | **0** | **3** | **3** |
| | | **கூடுதல் (அ+ஆ+இ+ஈ+உ)** | **53** | **38** | **15** | **29** | **44** |
| **நில அளவை பிரிவு:** | | | | | | | |
| 1 | வட்ட துணை ஆய்வாளர் | நிரந்தரம் | 1 | 1 | 0 | 1 | 1 |
| 2 | வட்ட சார் ஆய்வாளர் | நிரந்தரம் | 3 | 2 | 1 | – | 1 |
| 3 | முதுநிலை வரைவாளர் | நிரந்தரம் | 1 | 1 | 0 | 1 | 1 |
| 4 | இளநிலை வரைவாளர் | நிரந்தரம் | 1 | 1 | 0 | – | – |
| 5 | குறுவட்ட நில அளவர் | நிரந்தரம் | 6 | 3 | 3 | 1 | 4 |
| 6 | புல உதவியாளர் | நிரந்தரம் | 4 | 3 | 1 | 1 | 2 |
| | | **மொத்தம்** | **16** | **11** | **5** | **4** | **9** |
| | | **வருவாய்த் துறை** | **53** | **38** | **15** | **29** | **44** |
| | | **நிலஅளவைத்துறை** | **16** | **11** | **5** | **4** | **9** |
| | | **ஆக மொத்தம்** | **69** | **49** | **20** | **33** | **53** |

இதன்படி, புதியதாக தோற்றுவிக்கப்படவுள்ள மண்மங்கலம் வட்டத்திற்கு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் மற்றும் தொடரா செலவினம் பின்வருமாறு:—

**தொடரும் செலவினங்கள்:**

| *வ. எண்* | *விவரம்* | *தொகை* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | பணியாளர்களின் ஊதியம் (புதிய ஊதிய ஏற்ற முறையில்) | 1,98,41,516 |
| 2 | அலுவலக கட்டிட வாடகை | 2,00,000 |
| 3 | மின்சார கட்டணம் | 1,80,000 |
| 4 | எரிபொருள் (டீசல்) | 1,92,000 |
| 5 | தொலைபேசிக் கட்டணம் | 25,000 |
| | **மொத்தம் ..** | **2,04,38,516** |

**தொடராச் செலவினங்கள்:**

| *வ. எண்* | *விவரம்* | *எண்ணிக்கை* | *தொகை ரூபாய்* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1 | தளவாடங்கள் | – | 4,00,000 |
| 2 | ஈப்பு | 2 | 11,20,000 |
| 3 | தொலைபேசிக் கட்டணம் | 2 | 10,000 |
| 4 | கணினி | 3 | 1,05,000 |
| 5 | பிரிண்டர் (அச்சுப்பதிப்பு இயந்திரம்) | 3 | 35,000 |
| 6 | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 1 | 80,000 |
| 7 | பேக்ஸ் | 1 | 20,000 |
| 8 | குளிர்சாதனம் | 1 | 25,000 |
| 9 | தீயணைப்பான் | 3 | 20,000 |
| 10 | சுவர் கடிகாரம்/பணப்பெட்டி | – | 20,000 |
| | | **மொத்தம் ..** | **18,35,000** |

**3.** கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரையை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:—

(i) கரூர் வட்டத்தினைப் பிரித்து இணைப்பு–1ல் கண்டுள்ளவாறு புதிய மண்மங்கலம் வட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) புதியதாக உருவாக்கப்படும் மண்மங்கலம் வட்டத்திற்கு கீழ்க்கண்டவாறு 20 பணியிடங்கள் மறுபரவலமர்த்தல் மூலமும், 31 பணியிடங்கள் பதியதாக உருவாக்கவும் ஆக மொத்தம் 51 பணியிடங்கள் பதியதாக தோற்றுவிக்க ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

| *வ. எண்* | *பணியிடத்தின் பெயர்* | *As per Standard Pattern* | *மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டியது* | *புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள்* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| | **பொதுப் பிரிவு:** | | | |
| 1 | வட்டாட்சியர் | 1 | 0 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | 1 | 0 | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் | 1 | 1* | * |
| 4 | உதவியாளர் | 6+4 | 3 | 0 |
| 5 | வருவாய் ஆய்வாளர் | – | 3 | 1 |
| 6 | இளநிலை உதவியாளர் | 4 | 2 | 1 |

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | As per Standard Pattern | மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டியது | புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 7 | பதிவறை எழுத்தர் | 1 | 0 | 1 |
| 8 | தட்டச்சர் | 1 | 0 | 1 |
| 9 | அலுவலக உதவியாளர் (வருவாய் ஆய்வாளர்களுக்கு) | 3+4 | 5 | 2 |
| 10 | ஈப்பு ஓட்டுனர் | 1 | 0 | 1 |
| 11 | இரவுக் காவலர் | 1 | 0 | 1 |
| 12 | மசால்சி | 1 | 0 | 1 |
| | **மொத்தம்** | **29** | **14** | **11** |

* Standard Pattern–ன்படி 3–4 குறுவட்டங்கள் அடங்கிய ஒரு வட்டத்திற்கு ஒரு பணியிடம் உருவாக்கலாம். எனவே, மறுபரவலமர்த்தல் மூலம் ஒரு மண்டல துணை வட்டாட்சியர் பணியிடம் போதுமானது.

| | | | | |
|---|---|---|---|---|
| | **தேர்தல் பிரிவு:** | | | |
| 1 | துணை வட்டாட்சியர் | 0 | 0 | 1 |
| 2 | உதவியாளர் | 0 | 0 | 1 |
| | **மொத்தம் ..** | **0** | **0** | **2** |
| | **சமூக பாதுகாப்புத் திட்டம்:** | | | |
| 1 | தனி வட்டாட்சியர் (ச பா தி) | 1 | 0 | 1 |
| 2 | வருவாய் உதவியாளர் | 0 | 0 | 2 |
| 3 | இளநிலை உதவியாளர் | 0 | 1 | 0 |
| 4 | தட்டச்சர் | 0 | 0 | 1 |
| 5 | ஈப்பு ஓட்டுநர் | 0 | 0 | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | 0 | 0 | 1 |
| | **மொத்தம் ..** | **0** | **1** | **6** |
| | **வட்ட வழங்கள் பிரிவு:** | | | |
| 1 | வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர் நிலை) | 1 | 0 | 1 |
| 2 | உதவியாளர் | 0 | 0 | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | 0 | 0 | 1 |
| 4 | தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | 0 | 0 | 1 |
| 5 | அலுவலக உதவியாளர் | 0 | 0 | 1 |
| | **மொத்தம் ..** | **1** | **0** | **5** |
| | **சிறப்பு திட்ட அமலாக்கம்:** | | | |
| 1 | துணை வட்டாட்சியர் | 0 | 0 | 1 |
| 2 | வருவாய் உதவியாளர் | 0 | 0 | 1 |
| 3 | கணினி இயக்குபவர் (Consolidated Pay at Rs. 7500 p.m) | 0 | 0 | 1 |
| | **மொத்தம் ..** | **0** | **0** | **3** |
| | **நில அளவை பிரிவு:** | | | |
| 1 | மண்டல துணை ஆய்வாளர் | 1 | 0 | 1 |
| 2 | வட்டசார் ஆய்வாளர் | 1 | 1 | 0 |
| 3 | முதுநிலை வரைவாளர் | 1 | 0 | 1 |
| 4 | இளநிலை வரைவாளர் | 1 | 0 | 0 |
| 5 | குறுவட்ட அளவர் | 0 | 3 | 1 |
| 6 | புல உதவியாளர் | 1 | 1 | 1 |
| | **மொத்தம்** | **5** | **5** | **4** |

(iii) புதியதாக உருவாக்கப்படும் மண்மங்கலம் வட்டத்திற்கு, வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினம் ரூ. 65,48,800/– (ரூபாய் அறுபத்தைந்து இலட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து எண்ணூறு மட்டும்) மற்றும் தொடரா செலவினம் ரூ. 17,38,000/–(ரூபாய் பதினேழு இலட்சத்து முப்பத்தெட்டாயிரம் மட்டும்)–க்கு நிதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3(iii) ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**I. பணியாளர் சம்பளங்கள்**

(i) வருவாய் பணியிடங்கள் ரூ. 41,71,200/–

2053 00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –
I திட்டத்தில் சேராதது –AB வட்டப் பணியாளரமைப்புகள்–01 சம்பளங்கள்
**(த.தொ.கு. 2053 00 094 AB 0102)**

(ii) நில அளவைப் பணியிடங்ள் ரூ. 9,21,600/–

2029 00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் – I .
திட்டத்தில் சேராதது AF நில அளவை பராமரிப்பு பணி–01 சம்பளங்கள்

**(த.தொ.கு 2029 00 102 AF 0105)**

(iii) குடிமைப் பொருள் பணியிடங்கள் ரூ. 9,75,000/–
3456 00 நுகர் பொருள் வழங்கல்–001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும்–I
திட்டத்தில் சேராதது AB மாவட்ட பணியாளரமைப்பு –01 சம்பளங்கள்
**(த.தொ.கு. 3456 00 001 AB 0108)**

**(II)** 2053 00 மாவட்ட நிருவாகம்–094 ஏனைய பணியாளரமைப்பு–I
திட்டத்தில் சேராதது–AB வட்டப் பணியாளரமைப்புகள்

(அ) 05 அலுவலகச் செலவுகள் 01 தொலைப்பேசி கட்டணங்கள் ரூ. 31,000/–
**(த.தொ.கு. 2053 00 094 AB 0513)**

(ஆ) 05 அலுவலகச் செலவுகள்–03 மின் கட்டணங்கள் ரூ. 1,20,000/–
**(த.தொ.கு. 2053 00 094 AB 0531)**

(இ) 05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன் – ரூ. 4,10,000/–
**(த.தொ.கு. 2053 00 094 AB 0559)**

(ஈ) 06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை ரூ. 1,44,000/–
தொடரும் செலவினம் **(த.தொ.கு. 2053 00 094 AB 0611)**

(உ) 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ. 1,10,000/–
**(த.தொ.கு. 2053 00 094 AB 0914)**

(ஊ) 21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ. 11,12,000/–
**(த.தொ.கு. 2053 00 094 AB 2119)**

(எ) 45 பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ. 1,92,000/–
**(த.தொ.கு. 2053 00 094 AB 4500)**

(ஏ) 76 கணிணியும் துணை பாகங்களும்–01 வாங்குதல் ரூ. 1,00,000/–
**(த.தொ.கு. 2053 00 094 AB 7614)**

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணித் திட்டமாகும் (New Instrument of Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ. பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ. பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5 கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2013–2014 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும்பொருட்டு உரிய வரைவு விளக்கக் குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி (வ.செ. பொது/வருவாய்) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணையின் இணைப்பு–I இல் கண்டுள்ள அறிவிக்கை ***தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்*** வெளியிடப்படும். இப்புதிய வட்டம் 30–10–2013 ஆம் நாள் முதல் செயல்படும்.

7. புதிய மண்மங்கலம் வட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 3–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 62187/சி.எம்.பி.சி/2013, நாள் 29–10–2013இல் இசைவுடன் வெளியிடப்படுகிறது. மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண் 1763 (ஆயிரத்து எழுநூற்று அறுபத்து மூன்று).

(ஆளுநரின் ஆணைப்படி)

**ககன்தீப் சிங் பேடி,**
*அரசு செயலாளர்.*

**இணைப்பு–I**

*[அரசாணை (நிலை) எண் 427, வருவாய்த் துறை, 30 அக்டோபர் 2013.]*

**அறிவிக்கை**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், கரூர் மாவட்டத்தில் கரூர் வட்டத்தினை பிரித்து 2013ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 30 ஆம் நாளிலிருந்து மண்மங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு மண்மங்கலம் வட்டம் கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதிய மண்மங்கலம் வட்டத்தில் உள்ளடங்கும் 1. புகளூர், 2. வாங்கல். 3. தாளப்பட்டி, 4. மண்மங்கலம் ஆகிய குறுவட்டங்கள் மீது தற்போது கரூர் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி மண்மங்கலம் வட்டாட்சியரால் 2013 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

| *வ. எண்* | *குறுவட்டத்தின் பெயர்* | *வ. எண்* | *வருவாய் கிராமங்களின் பெயர்* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(1)* | *(2)* |
| 1. | புகளூர் | 1 | கோம்புபாளையம் |
| | | 2 | வேட்டமங்கலம் (கிழக்கு) |
| | | 3 | வேட்டமங்கலம் (மேற்கு) |
| | | 4 | திருக்காடுதுறை |
| | | 5 | நஞ்சை புகளூர் |
| | | 6 | புஞ்சை புகளூர் (வடக்கு) |
| | | 7 | புஞ்சை புகளூர் (தெற்கு) |
| | | 8 | புஞ்சை தோட்டக்குறிச்சி |
| | | 9 | நஞ்சை தோட்டக்குறிச்சி |
| 2 | வாங்கல் | 1 | நஞ்சை கடம்பகுறிச்சி |
| | | 2 | புஞ்சை கடம்பகுறிச்சி |
| | | 3 | நன்னியூர் |
| | | 4 | வாங்கல் |
| | | 5 | குப்புச்சிளாளையம் |
| 3 | தாளப்பட்டி | 1 | ஆண்டாங்கோவில் (கிழக்கு) |
| | | 2 | ஆண்டாங்கோவில் (மேற்கு) |
| | | 3 | கருப்பம்பாளையம் |
| | | 4 | அப்பிப்பாளையம் |
| | | 5 | பள்ளப்பளையம் |
| | | 6 | தாளப்பட்டி |
| 4 | மண்மங்கலம் | 1 | மண்மங்கலம் |
| | | 2 | ஆத்தூர் |
| | | 3 | காதப்பாறை |
| | | 4 | மின்னாம்பள்ளி |
| | | 5 | நெரூர் (தெற்கு) |
| | | 6 | நெரூர் (வடக்கு) |
| | | 7 | அச்சமாபுரம் |
| | | 8 | சோமூர் |
| | | 9 | பஞ்சமா தேவி |
| | | 10 | கோயம்பள்ளி |

**ககன்தீப் சிங் பேடி,**
*அரசு செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU